Dina Mani

imma™

Chennai Date: 18.01.08 Page No: 06

# சாமானியராக இருந்து சாதனை படைத்தவர் எல்.வி.பிரசாத்

## கருணாநிதி புகழாரம்

சென்னை, ஜன. 17: வாழ்க்கையில் மிகவும் சாமானியராக இருந்து சாதனை படைத்தவர் எல்.வி.பிரசாத் என்று முதல்வர் கருணாநிதி புகழாரம் சூட்டினார்.

பிரசாத் ஸ்டுடியோ நிறுவனரும், தயாரிப்பாளருமான எல்.வி. பிரசாத் நூற்றாண்டு விழா சென்னை நந்தம்பாக்கத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது. எல்.வி. பிரசாத் மகன் ரமேஷ் பிரசாத், பேரன் சாய் பிரசாத் ஆகியோர் விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

விழாவுக்கு தலைமை தாங்கி முதல்வர் கருணாநிதி பேசியது:

இந்த விழாவில் பங்கேற்பது எனது கடமை. எல்.வி.பிரசாத் சாமானியராகப் பிறந்து சரித்திரத்தில் இடம் பெற்ற சாதனையாளர். அவருக்கும் எனக்கும் நீண்ட காலம் நெருக்கமான நட்பு உண்டு.

அவரது தயாரிப்பில் உருவான மனோகரா, இருவர் உள்ளம், தாயில்லா பிள்ளை ஆகிய 3 படங்களுக்கு நான் வசனம் எழுதியுள்ளேன். இதில் மனோகரா படத்தின் வெற்றியைப் பார்த்த அவர், தாயில்லா பிள்ளை படத்துக்கு வசனம் எழுதுமாறு கேட்டார். அதற்கு நான் கூறிய தொகையை கேட்ட அவர், படம் நூறு நாள்கள் ஓடினால் 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பதாகக் கூறினார். படத்தின் 100-வது நாள் காலையில் என் வீட்டு வாசலில் கார் வந்து நின்றது. சொன்னபடி 10 ஆயிரம் ரூபாயை என்னிடம் கொண்டு வந்து கொடுத்தார்.

தாயில்லா பிள்ளை படத்தில் தலித் வீட்டுக் குழந்தை பிராமணர் வீட்டிலும், பிராமணர் வீட்டுக் குழந்தை தலித் வீட்டிலும் வளர்வதுதான் கதை. அந்தக் காலத்திலேயே சாதி, சமய வேறுபாடு இல்லாமல் சமுதாயத்தை உயர்த்த வேண்டும் என்ற நோக்கில் படம் எடுத்தவர் எல்.வி.பிரசாத். சமூக சீர்திருத்தக் கருத்துக்களை படங்களின் வாயிலாக தெரிவித்தவர் அவர் என்றார் முதல்வர் கருணாநிதி.

**கமல்ஹாசன்:** திறமைக்கு மரியாதை கொடுத்தவர் எல்.வி.பிரசாத். அவரிடமிருந்து பல வாழ்க்கைத் தத்துவங்களைக் கற்றுக் கொண்டேன் நான். சினிமாவை நேசித்தவர் அவர். உடல் நலமின்றி இருந்த போது அவரை பிரசாத் ஸ்டுடியோவுக்கு அழைத்து வந்தனர். உடனே எழுந்து உட்கார்ந்து விட்டார். அந்த அளவுக்கு அவர் சினிமாவை உயிராக நேசித்தார்.

**மத்திய அமைச்சர் தாசரி நாராயண ராவ்:** தென்னிந்தியாவைச் சேர்ந்த சினிமா கலைஞர்களில் பலர் வட இந்திய சினிமாவிலும் கொடி கட்டிப் பறந்தனர். அந்த வகையில் இந்திய சினிமாவுக்கு சேவை செய்த பெருமை பிரசாத் ஸ்டுடியோவுக்கும், அதை நிறுவிய எல்.வி. பிரசாத்துக்கும் உண்டு. வாழ்க்கை ஒரு படம் என்றால் அதில் நிஜமான ஹீரோ எல்.வி. பிரசாத் என்றார் அவர்.

நிகழ்ச்சியில் இயக்குநர்கள் கே.பாலசந்தர், மணிரத்தினம், ஹிந்தி நடிகர் ஜிதேந்திரா, பழம்பெரும் நடிகைகள் சௌகார் ஜானகி, அஞ்சலி தேவி, சரோஜா தேவி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



சென்னை நந்தம்பாக்கத்தில் நடைபெற்ற பிரசாத் ஸ்டுடியோ நிறுவனர் எல்.வி. பிரசாத் நூற்றாண்டு விழாவில் சிறப்புரையாற்றினார் முதல்வர் கருணாநிதி. உடன் (இடமிருந்து) பிரசாத் குழும தலைவர் ரமேஷ் பிரசாத், மத்திய அமைச்சர் தாசரி நாராயண ராவ்.